ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2395/32 - 2024 ජූලි මස 31 වැනි බදාදා - 2024.07.31
2395/32 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்**

2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம், இங்கே தரப்பட்டுள்ள அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பண்டம் தொடர்பாக அதற்கு நேரொத்த பதிவிலே அவ்வட்டவணையின் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அளவிலான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை விதிக்கின்றேன்.

**அட்டவணை**

| *I ஆம் நிரல்* | | | | *II ஆம் நிரல்* |
|---|---|---|---|---|
| *வியாபாரப் பண்ட இனம்* | | | | *விசேட வியாபாரப் பண்ட அறவீடு* |
| | *இ. மு. தலைப்பு* | *இ. மு. குறியீடு* | *விவரணம்* | |
| 1 | 03.05 | 0305.54.10 | நெத்தலிகள் | கிலோ கிராம் ஒன்றுக்கு 100.00 ரூபா |
| 2 | | 0305.52.00<br>0305.53.00<br>0305.54.90<br>0305.59.30<br>0305.59.90 | உலர் மீன்கள் | கிலோ கிராம் ஒன்றுக்கு 100.00 ரூபா |

1A — PG 6800 - 429 (2024/07)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *I ஆம் நிரல்* | | | | *II ஆம் நிரல்* |
|---|---|---|---|---|
| *வியாபாரப் பண்ட இனம்* | | | | *விசேட வியாபாரப் பண்ட அறவீடு* |
| | *இ. மு. தலைப்பு* | *இ. மு. குறியீடு* | *விவரணம்* | |
| 3 | 09.10 | 0910.99.10 | வெந்தயம் (மெத் வித்து) | கிலோ கிராம் ஒன்றுக்கு 50.00 ரூபா |
| 4 | 11.02 | 1102.90.20 | குரக்கன் (எலியுசைன் குரக்கானா இன) மாவு | கிலோ கிராம் ஒன்றுக்கு 150.00 ரூபா |
| 5 | 12.07 | 1207.50 | கடுகு விதைகள் | கிலோ கிராம் ஒன்றுக்கு 62.00 ரூபா |
| 6 | 25.01 | 2501.00 | உப்பும் (மேசை உப்பும், இயல்பிழந்த உப்பு உட்பட) தூய சோடியம் குளோரைட்டும், திரவக் கரைசலாக அல்லது சேர்க்கப்பட்ட தடிப்படைவதை எதிர்க்கும் காரணிகள் அல்லது இலகுவாகப் பாய்வதை ஊக்கு விக்கும் காரணிகள், சேர்க்கப்பட்டவை அல்லது இம் மூன்று நிலைகளிலும் இல்லாதது ; கடல் நீர் | கிலோ கிராம் ஒன்றுக்கு 40.00 ரூபா |

2. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக ;

வர்த்தக நோக்கம் தவிர்ந்த மருந்துகளை உற்பத்தி செய்யும் நோக்கத்திற்காக, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவுசெய்துள்ள எந்தவொரு மருந்துகள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களாலும், சுகாதாரம் தொடர்பான விடயத்திற்குரிய அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில் இறக்குமதி செய்யப்படும் மேலே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள இ. மு. குறியீடு 2501.00 இன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள உப்பின் (சோடியம் குளோரைட்டு வீ. பீ.) மீது பிரயோகிக்கப்படக்கூடிய விசேட வியாபார பண்ட அறவீடான கி. கி. ஒன்றிற்கு 40 ரூபாவில் இருந்து கி. கி. ஒன்றிற்கு 10 ரூபாவினை அறவிட்ட பின்பு, மிகுதித் தொகையினை விலக்களிக்கின்றேன்.

3. மேலே குறிப்பிடப்பட்ட கட்டளை 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் உப பிரிவு (3) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2024, யூலை மாதம் 31 ஆந் திகதி வரை செல்லுபடியாகும்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2024, யூலை 31.

EOG 07 - 0014

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.